# “கலைஞரும் கழகமும் போல, தலைவரும் உழைப்பும் போல மணமக்கள் நீடூழி வாழ்க”

## பொன்.குமார் இல்லத் திருமண விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, பிப்.16–**

**‘கலைஞரும் கழகமும் போல, தலைவரும் உழைப்பும்போல மணமக்கள் நீடூழி வாழ்க’ என்று மணவிழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.**

**சென்னை நீலாங்கரை காந்தி நகர், ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில் தமிழ்நாடு அரசின் கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவர் பொன்.குமாரின் மகள் திவ்யா – ரஞ்சித் குமார் இணையரின் திருமணத்தை நேற்று (வியாழக்கிழமை) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்திவைத்து மணமக்களை வாழ்த்திப் பேசினார்.**

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் அண்ணன் பொன்.குமார் அவர்களின் அன்பு மகள் தங்கை திவ்யா, தம்பி ரஞ்சித்குமார் அவர்களின் திருமணத்தை, நான் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மணமக்களை உங்கள் சார்பாக, அனைவரின் சார்பாக வாழ்த்துகிறேன்.

கடந்த 2022-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அண்ணனின் இல்லத் திருமண விழாவை, நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் நடத்தி வைத்தார்கள். இன்றைக்குக் கூட நம் கழகத் தலைவர் அவர்கள்தான் இந்தத் திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைப்பதாக இருந்தது.

**முதல்வருக்கு கடமை இருப்பதால், என்னை அனுப்பி வைத்திருக்கிறார்!**

இன்று சட்டமன்றத்தில் நம் தலைவர் அவர்கள் பதில் உரை ஆற்றவேண்டிய கடமை இருப்பதால், அவர் என்னை இங்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இன்னும் சொல்லப் போனால் நேற்று திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நம் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தியிருக்கிறார்.

நேற்று நள்ளிரவு அவரின் பதில் உரையைத் தயார்செய்து கொண்டிருந்த நிலையிலும், நேற்று நள்ளிரவு 11:30 மணியளவில் என்னை தொலைபேசியில் முதலமைச்சர் அவர்கள் அழைத்து, `நாளைக்கு மறந்து விடாதே, நம் பொன் குமாரின் வீட்டுத் திருமணத்தை, எனக்குப் பதிலாக நீதான் நடத்தி வைக்க வேண்டும். இல்லையென்றால், அவர் கோபித்துக் கொள்வார்”என்று தலைவர் அவர்கள் அறிவுறுத்தித்தான் என்னை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்.

அந்த அளவிற்கு நம் தலைவரின் மீது மிகுந்த உரிமை கொண்டவர், அன்பு கொண்டவர் அண்ணன் பொன் குமார் அவர்கள். இந்தத் திருமண விழா நிகழ்ச்சி நம் குடும்ப விழா போல சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்டுச் சொன்னால், இந்தத் திருமணம் சுயமரியாதைத் திருமணமாக நடைபெற்றுக் கொண்டிருப்பது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி. கூடுதல் பெருமை.

**50 வருடங்களுக்கு முன்பெல்லாம் திருமணப் பத்திரிக்கைகள்!**

மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். ஒரு ஐம்பது வருடங்களுக்கு முன்பெல்லாம் திருமணப் பத்திரிக்கைகளை எடுத்துப் பார்த்தீர்கள் என்றால், மணமக்களின் பெயர் மட்டும்தான் இருக்கும். அவர்களுடைய படிப்பு என்ன படித்திருக்கிறார்கள் என்ற குறிப்பு எதுவுமே இருக்காது. ஆனால், இன்றைக்கு பி.இ., எம்.பி.பி.எஸ்., எம்.பி.ஏ இப்படிப் படித்திருக்கிறார்கள். திருமணப் பத்திரிக்கையில் அவர்களின் பெயருக்குப் பின்னால் அவர்கள் பெற்ற பட்டப்படிப்பின் பெயர் இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நம் திராவிட முன்னேற்ற கழகம்தான். நம் தலைவர்கள்தான்.

இன்றைக்கு மகளிர் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு, பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாது. அப்படிப்பட்ட நிலைமைதான் இருந்தது. இன்றைக்குப் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஆண்களைவிட, அதிகமாகப் படிக்கிறீர்கள். அதிகமாகச் சாதிக்கிறீர்கள். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்ததும் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி, நம் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

அண்ணன் பொன் குமார் அவர்கள் கழகத்தின் மீது தனிப் பற்றுக் கொண்டவர். முத்தமிழறிஞர் கலைஞரிடத்திலும் சரி, நம் தலைவர் முதலமைச்சரிடத்திலும் சரி, எந்தக் கருத்தையும் பயப்படாமல், தயங்காமல் சொல்லக்கூடியவர்தான் அண்ணன் பொன் குமார் அவர்கள்.

**தொழிலாளர்களின் பாதுகாப்பு அரணாக எப்பொழுதுமே திகழ்பவர்!**

அண்ணன் பொன் குமார் அவர்களைப் பொறுத்தவரை, கட்டுமானத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்களின் பாதுகாப்பு அரணாக எப்போதுமே திகழ்பவர். கழகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் பல ஆண்டுகளாக ஒரு பாலமாகச் செயல்பட்டு வருபவர்.

2016 சட்டமன்றத் தேர்தலில் கலைஞரின் அன்பைப் பெற்று, பண்ருட்டி தொகுதியில் கழகத்தின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டவர். கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாத ஒரு சூழல் ஏற்பட்டது. ஆனால், நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் யாரை எப்படி எதற்காகச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்று அறிந்து, பொறுப்பான பொறுப்பைக் கொடுத்தவர்தான் நம்முடைய தலைவர் அவர்கள்.

அந்தக் காரணத்தால்தான் அண்ணன் அவர்கள் கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவராக நியமித்தார்கள். முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக் காலத்தில் அண்ணன் அவர்கள் இதே பொறுப்பைச் சிறப்பாக வழி நடத்தியவர். அப்போது சிறப்பாகச் செயல்பட்டதின் காரணத்தால்தான் இன்றைக்கு மீண்டும் நம் முதலமைச்சர் அவர்கள், கழகத் தலைவர் அவர்கள் அந்தப் பொறுப்பை நம் அண்ணன் பொன் குமார் அவர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

**முதல்வரின் அன்பைப் பெற்றவர் அண்ணன் பொன்குமார்**

நம் திராவிட மாடல் அரசு அமைந்தவுடன் அமைக்கப்பட்ட முதல் வாரியத்தின் தலைவர் அண்ணன் பொன் குமார் அவர்களுக்குத்தான். அந்த அளவிற்கு கழகத் தலைவர் அவர்கள், நம் முதலமைச்சர் அவர்களின் அன்பைப் பெற்றவர் அண்ணன் பொன் குமார் அவர்கள்.

அவரின் இல்லத் திருமண விழாவில் பங்கேற்பதில் எனக்கு மிகப்பெரிய பெருமை. கழகத்திற்குத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. விவசாயத் தொழிலாளர் அணி என்ற ஒரு அணியும் இருக்கிறது. கழகத்தின் அறிவிக்கப்படாத தொழிலாளர் அணியாக அண்ணன் அவர்களின் இயக்கம் பல ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

அண்ணன் அவர்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, வெளிநாட்டில் பணிபுரிகின்ற நம் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களுக்கு ஏதாவது ஒரு பாதிப்பு என்றாலும் உடனே களத்தில் இறங்கி, அதைச் சரி செய்யக்கூடியவர்தான் அண்ணன் பொன் குமார் அவர்கள்.

**25 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள வாரியம்!**

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர், இன்றைக்குக் கிட்டத்தட்ட 25 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள வாரியமாகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது இந்த நல வாரியம்.

தமிழ்நாடு அரசால் 19 நல வாரியங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த 19 நல வாரியங்களில் முதன்மையான வாரியம் என்றால், அது கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்தான். அந்தச் சிறப்பை பெற்றவர் அண்ணன் பொன் குமார் அவர்கள். கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீடுகள், மருத்துவக் காப்பீடு திட்டம், அவர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகை என ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இந்த நேரத்தில் ஒரு விஷயத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். விரைவில், இரண்டு மாதத்தில் மக்களவைத் தேர்தல் வர இருக்கிறது. இங்கே நிறையத் தொழிலாளர் பெருமக்கள் வந்திருக்கிறீர்கள்.

இந்திய ஒன்றியத்தில் ஆட்சியில் உள்ள தொழிலாளர்கள் விரோத பாசிச அரசை வீழ்த்துவதற்கு, அண்ணன் பொன் குமார் அவர்களின் திருமண விழாவில் நாம் அனைவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்னொருபுறம் அ.தி.மு.க-வும் வருவார்கள். எங்களுக்கும் பா.ஜ.க-வுக்கும் சம்பந்தமில்லை, நாங்கள் விலகி விட்டோம் என்று பொய் சொல்வார்கள், நாடகம் போடுவார்கள், அவர்களை நம்பாதீர்கள், உங்களுக்கே தெரியும்.

இப்படிப்பட்ட பாசிஸ்ட்டுகளையும் அடிமைகளையும் நாம் மக்களவைத் தேர்தலில் விரட்டி அடிக்க வேண்டும்.

2021 தேர்தலில் அடிமைகளை வீட்டிற்கு அனுப்பினோம். வர இருக்கிற இந்தத் தேர்தலில் அடிமைகளின் எஜமானர்களையும் வீட்டிற்கு அனுப்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது. அந்தப் பொறுப்பை உணர்ந்து, நாம் அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் 11 மணிக்குப் பதில் உரை அளிக்க இருக்கிறார்கள். அதன் பிறகு நானும் சட்டமன்றத்தில் பேச இருக்கிறேன். இருந்தாலும், இன்றைக்கு இந்தத் திருமண விழாவிற்கு வந்து மணமக்களை வாழ்த்தி, உங்களுடைய வாழ்த்துகளை எல்லாம் பெற நானும் வந்திருக்கிறேன்.

எனவே, மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, விட்டுக் கொடுத்து வாழுங்கள். அதே சமயம் சுயமரியாதையோடு வாழுங்கள்.

**அழகான தமிழ்ப் பெயரை குழந்தைகளுக்கு சூட்டுங்கள்!**

நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மாதிரி இருங்கள். பா.ஜ.க., அ.தி.மு.க கூட்டணி மாதிரி இருக்காதீர்கள். எந்த நேரம் கூட்டணி இருக்கிறது, எந்த நேரம் கூட்டணி இல்லை, யாருக்கு யார் விட்டுக் கொடுக்கிறார்கள், யாருக்கு யார் அடிமை என்றே தெரியாமல் இருப்பார்கள். அந்த மாதிரி இருக்காதீர்கள். நம் கூட்டணி மாதிரி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து சுயமரியாதை யோடு, அதே நேரம் நம் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல், உங்களுடைய திருமண வாழ்க்கை இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பகுத்தறிவோடு இருங்கள், இன்னொரு முக்கியமான ஒரு வேண்டுகோள். மணமக்கள் உங்களுக்குப் பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி ஒரு அழகான தமிழ்ப் பெயரை அந்தக் குழந்தைக்குச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மணமக்கள் திவ்யா, ரஞ்சித் குமார் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்தத் திருமண விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொய்தீன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த ரமேஷ் உள்பட பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

---

### காஞ்சிபுரம் மாவட்டம் காரப்பேட்டை அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனையில்

## மிகப்பெரிய ஆராய்ச்சி மையம் - விரைவில் திறப்பு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

*சென்னை, பிப். 16 -*

*அடையார் புற்றுநோய் நிறுவனம் நடத்திய, 7வது இளைஞர்கள் நல விழா - வை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (15.02.2024) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், அடையார் புற்றுநோய் நிறுவனம் நடத்திய 7வது இளைஞர்கள் நல விழா - 2024 நிகழ்ச்சியில் “உங்கள் உடல் உறுப்புகள் பேசுவதை கேளுங்கள்” எனும் விழிப்புணர்வு குறுந்தகட்டினை வெளியிட்டனர்.*

*அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;*

*அடையார் புற்றுநோய் மருத்துவமனை சார்பில் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் இளைஞர்களிடையே புகையிலைமற்றும்பான்மசாலா, குட்கா போன்ற போதைப் பொருட்களால் ஏற்படுகின்ற புற்றுநோய் பாதிப்புகளை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் மேற்கொண்டு வருகிறார்கள். நினைவில் வாழும் மருத்துவர் அம்மையார் சாந்தா அவர்கள் தொடர்ச்சியாக இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை எடுத்து வந்தார்கள். அந்தவகையில் இன்று அடையார் புற்றுநோய் மருத்துவமனை நிர்வாகம், மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறை ஆகியவை ஒருங்கிணைத்து HCL அமைப்பின் துணையோடு இளைஞர்கள் நலன் விழா என்கின்ற ஒரு சீரிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது.*

*மேலும் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வுகள் ஏற்படுத்திடும் நோக்கில் பல்வேறு அரங்கங்களை அமைத்து அரசு நடைமுறையில் இருக்கின்ற திட்டங்களையும் மாணவர்கள் அறிந்துக் கொள்ளும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. புற்றுநோய் பாதிப்புகள் என்பது உலகளவில் அதிகமாகிக் கொண்டிருக்கும் நிலையில் அதனை கட்டுப்படுத்திடும் நோக்கில் ஏராளமான திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் மும்பையில் உள்ள TATA Memorial Cancer Institute- க்கு நிகராக தென்னிந்தியாவில் புற்றுநோய் மருத்துவமனை அமைத்திடும் வகையில், கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் முதற்கட்டமாக ரூ.218 கோடி செலவில் காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனையில் மிகப் பெரிய ஆராய்ச்சி மையம் ஒன்று கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, மிக விரைவில் திறந்து வைக்கப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புற்றுநோய் பாதிப்புகளில் இருந்து மக்களை காக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.*

*முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு தமிழ்நாடு முழுவதிலும் கடந்த 3 மாதங்கள் சட்டத்தை மீறி பான்மசாலா, குட்கா போன்ற பொருட்களை விற்பனை செய்த 6,500 கடைகள் கடைகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு சீல் வைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்கள் நலன் மீது அக்கறை கொண்டு இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.*

*இவ்வாறு அவர் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், அடையாறு புற்றுநோய் மருத்துவமனை இயக்குநர் மரு.கல்பனா பாலகிருஷ்ணன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இணை இயக்குநர் மரு.கிருஷ்ணராஜ், அடையாறு புற்றுநோய் மருத்துவமனை மரு.சுரேந்திரன், HCL Foundation நிறுவனத்தின் மரு.சேத்தனா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் துரைராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.*

---

### கழகத்தின்

## கொள்கை விளக்காக ஒளி வீசியவர்!

### கயல் தினகரன் மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, பிப். 16–

“கழகத்தின் கொள்கை விளக்காக ஒளி வீசியவர் கயல் தினகரன் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கொள்கை விளக்காக ஒளிவீசிய கழக இலக்கிய அணியின் மாநில இணைச் செயலாளர் திரு. கயல் தினகரன் அவர்கள் மறைந்தார் என்ற துயரச் செய்தி வந்தடைந்தது என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது.

பகுத்தறிவு கொள்கைகளின்பால் ஈர்க்கப்பட்டு திராவிடக் கருத்தியலை உள்வாங்கி கழகமே தன் மூச்சென செயல்பட்ட முன்னோடிதான் நமது கயல் தினகரன் அவர்கள். இதழியல் துறையில் மின்னிய அவரது எழுத்தாற்றல் சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களால் பட்டைதீட்டப்பட்டது.

அவரது ‘தென்னகத் தலைவன்’ ஏட்டினை பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான முரசொலியில் துணை ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் பெற்றார்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்களது கரங்களால் பெற்ற பெருமைக்குரியவர். எழுபது ஆண்டுகளுக்கும் மேலாகக் கருப்பு சிவப்பே தனது வாழ்வென இருந்த கயல் தினகரன் இயற்கையின் மடியில் துயில் கொள்ளச் சென்றிருப்பது கழகத்துக்குப் பேரிழப்பாகும்.

கயல் தினகரன் அவர்களது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், கழகத் தோழர்கள் அனைவர்க்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இரா. காளியப்பன்

**பிப்ரவரி 16 (2008)**



**தி.மு.க. தொடக்கக் கால உறுப்பினராகவும் தொடர்ந்து மாவட்ட பிரதிநிதியாகவும் – நான்குநேரி வட்டக் கழக அவைத் தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் – மூன்று முறை இராதாபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – நெல்லை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஐந்துமாத சிறைவாசமும் – சட்ட எரிப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.